# ஜனநாயக உரிமைக்குத் துணை நின்ற திராவிட மாடல்!

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் (CAA) மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்திய முஸ்லிம்களை மட்டுமல்ல, இந்தியாவில் வாழும் இலங்கைத் தமிழர்களையும் வஞ்சித்தது.

40 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் உள்ள முகாம்களில் வசித்து வரும் இலங்கைத் தமிழர்களுக்கு சட்டப்படியும் ஆவணங்களின்படியும் கிடைக்கவேண்டிய குடியுரிமைக்கு வழி இல்லாமல் செய்தது பா.ஜ.க. அரசின் CAA. (இன்றைய முரசொலியில் இது குறித்த விரிவான தலையங்கம் வெளியிடப்பட்டுள்ளது).

அதே நேரத்தில், தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியது மட்டுமின்றி, அவர்களின் குடியுரிமை உள்ளிட்ட நீண்டகாலத் தீர்வுக்கான சட்டப்பூர்வமான வழிமுறைகளையும் கையாண்டார்.



தமிழ்நாடு அரசின் இலங்கைத் தமிழர் நலன் ஆலோசனைக் குழு உறுப்பினர்களும் அரசின் மறுவாழ்வுத்துறையும் இணைந்து மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் குடியுரிமைக்கான முயற்சி களை மேற்கொண்டனர்.

திருச்சி கொட்டப்பட்டு இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் நளினி, நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கில், சட்டரீதியான உதவிகளை மறுவாழ்வுத்துறையும் ஆலோசனைக்குழுவும் UNHCR உள்ளிட்ட அமைப்பினரும் செய்தனர். அவருக்குச் சாதகமாக அமைந்த தீர்ப்பின் விளைவாக, இந்திய பாஸ்போர்ட்டும் வாக்காளர் அடையாள அட்டையும் பெற்ற நளினி, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தார். இந்தியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழர் ஒருவருக்கு வாக்குரிமை கிடைத்தது அதுவே முதல் தடவை.

இந்த முறை S.I.R. நடவடிக்கையால் அவரது பெயர் நீக்கப்பட்டுவிட்டது. மறுவாழ்வுத்துறையும் வழக்கறிஞர்களும் அவருக்கு உதவி செய்ததன் விளைவாக, வாக்காளர் பட்டியலில் உரிய நேரத்தில் பெயர் சேர்க்கப்பட்டது. 2026 சட்டமன்றத் தேர்தலில், கொட்டப்பட்டு முகாமில் நளினியுடன் கோகுலேஸ்வரன் என்பவரும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றார்.




சிவகங்கை மாவட்டம் - ஒக்கூரில் உள்ள மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர் மேரி ஷாலினி, திருநெல்வேலி மாவட்டம் - கோபால சமுத்திரம் முகாமில் வசிக்கும் ரவிச்சந்திரன், பவானிசாகர், கன்னியாகுமரி முகாம்களைச் சேர்ந்தவர்கள் என 10 பேருக்கு வாக்களிக்கும் உரிமை சட்டரீதியாகக் கிடைத்துள்ளது.



கவுன்சிலர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்கூட எட்டிப்பார்க்காமல் இருந்த இலங்கைத் தமிழர் மறு வாழ்வு முகாம் களுக்கு, முதலமைச்ச ராக நேரில் சென்றவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளைக்கேட்டார். அதனை நிறைவேற்ற ஆலோசனைக் குழுவை அமைத்தார்.

பா.ஜ.க அரசு வஞ்சித்து வருகிற நிலையிலும், சட்டப்போராட்டத்தில் துணை நின்று 10 பேர் தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு வாக்குரிமை கிடைக்கச் செய்து, தன்னை ஜனநாயகக் காவலராக நிரூபித்துள்ளார், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.



**கோவி.லெனின்**
தமிழ்நாடு அரசின்
இலங்கைத் தமிழர் நலன்
ஆலோசனைக்குழு
உறுப்பினர்.

# தமிழ்நாட்டில் 234 தொகுதிகளில் பதிவான வாக்கு சதவீதம்!

சென்னை, ஏப். 27 -
தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் பதிவான வாக்கு சதவீதம் வெளியாகியுள்ளது. தமிழகத்தில் 234 தொகுதிகளை கொண்ட சட்டப்பேரவைக்கு ஏப். 23 அன்று தேர்தல் நடந்தது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப் பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது.

தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். இதில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7,728 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் ஆவர்.

இந்நிலையில், தமிழக சட்டப் பேரவை தேர்தலில் 85.16 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

இதில் தொகுதி வாரியாக பதிவான வாக்கு சதவீதம் வருமாறு: எழும்பூர் 85.55%, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி 84.34%, சைதாப்பேட்டை 77.84%, ஆர்.கே.நகர் 90.50%, அண்ணாநகர் 85.49%, கொளத்தூர் 86.11%, துறைமுகம் 82.75%, தி.நகர் 83.55%, பெரம்பூர் 89.79%, திரு.வி.க. நகர் 78.70%, ஆயிரம் விளக்கு 83.08%, வேளச்சேரி 84.50%, விருகம்பாக்கம் 85.49%, திருமங்கலம் 87.03%, சோழிங்கநல்லூர் 80.37%, திருவொற்றியூர் 84.41%, பல்லாவரம் 83.63%, ஆலந்தூர் 86.15%, மாதவரம் 83.46%, செங்கல்பட்டு 86.36%, காஞ்சிபுரம் 87.15%, திருவள்ளூர் 89.51%, மதுராந்தகம் 92.28%, மதுரவாயல் 78.55%, அம்பத்தூர் 77.00%, பூந்தமல்லி 83.41%, ஆலங்குடி 84.50%, ஆலங்குளம் 85.32%, அம்பாசமுத்திரம் 82.85%, ஆம்பூர் 90.51%, அணைக்கட்டு 89.66%, ஆண்டிப்பட்டி 83.32%, அந்தியூர் 88.15%, அரக்கோணம் 90.12%, ஆரணி 89.22%, அறந்தாங்கி 78.98%, அரவக்குறிச்சி 91.74%, ஆற்காடு 91.01%, அரியலூர் 88.94%,

அருப்புக்கோட்டை 84.71%, ஆத்தூர் (திண்டுக்கல்) 89.44%, ஆத்தூர் (சேலம்) 90.24%, ஆவடி 78.81%, அவிநாசி 90.57%, பர்கூர் 88.00%, பவானி 91.96%, பவானிசாகர் 89.52%, புவனகிரி 87.82%, போடி நாயக்கனூர் 82.72%, செங்கம் 87.96%, செய்யாறு 91.97%, செய்யூர் 90.07%, சிதம்பரம் 83.81%, கோவை வடக்கு 75.67%, கோவை தெற்கு 82.14%, குளச்சல் 74.13%, குன்னூர் 78.38%, கடலூர் 83.69%, கம்பம் 81.23%, தாராபுரம் 88.92%, தர்மபுரி 89.44%, திண்டுக்கல் 86.00%, எடப்பாடி 92.08%, ஈரோடு கிழக்கு 89.80%, ஈரோடு மேற்கு 87.95%, கந்தர்வகோட்டை 84.85%, கெங்கவள்ளி 88.83%, செஞ்சி 88.21%, கோபிச்செட்டிப்பாளையம் 90.74%, கூடலூர் 80.77%, குடியாத்தம் 90.47%, கும்மிடிப்பூண்டி 90.97%, அரூர் 87.72%, ஓசூர் 80.35%,

ஜெயங்கொண்டம் 85.85%, ஜோலார்பேட்டை 89.45%, கடையநல்லூர் 81.41%, கலசப்பாக்கம் 90.91%, கள்ளக்குறிச்சி 87.95%, காங்கேயம் 91.56%, கன்னியாகுமரி 81.43%, காரைக்குடி 74.17%, கரூர் 93.39%, காட்பாடி 88.07%, காட்டுமன்னார் கோவில் 82.11%, கவுண்டம்பாளையம் 85.74%, கிள்ளியூர் 71.29%, கீழ்பெண்ணாத்தூர் 90.12%, கே.வி.குப்பம் 87.25%, கீழ்வேலூர் 87.98%, கிணத்துக்கடவு 87.11%, கோவில்பட்டி 79.27%, கிருஷ்ணகிரி 84.85%, கிருஷ்ணராயபுரம் 92.49%, குளித்தலை 92.80%, குமாரபாளையம் 92.65%, கும்பகோணம் 81.03%, குன்னம் 85.04%, குறிஞ்சிப்பாடி 88.60%, லால்குடி 86.51%, மடத்துக்குளம் 86.90%,

மதுரை மத்திய 73.88%, மதுரை கிழக்கு 79.90%, மதுரை வடக்கு 72.63%, மதுரை தெற்கு 78.26%, மதுரை மேற்கு 77.82%, மயிலம் 89.70%, மண்ணச்சநல்லூர் 87.65%, மானாமதுரை 79.22%, மணப்பாறை 88.81%, மன்னார்குடி 82.13%, மயிலாடுதுறை 79.67%, மேலூர் 82.44%, மேட்டுப்பாளை யம் 85.92%, மேட்டூர் 89.18%, மொடக்குறிச்சி 90.34%, முது குளத்தூர் 76.60%, முசிறி 86.78%, மயிலாப்பூர் 74.81%, நாகப்பட்டினம் 85.87%, நாகர்கோவில் 74.72%, நாமக்கல் 87.72%, நாங்குநேரி 80.15% நன்னிலம் 85.91% நத்தம் 90.93% நெய்வேலி 87.19%, நிலக்கோட்டை 88.07% ஒட்டன் சத்திரம் 90.60%, ஓமலூர் 90.86%, ஒரத்தநாடு 82.85%, ஓட்டப்பிடாரம் 79.47%,

பத்மநாமபுரம் 75.46%, பாலக்கோடு 92.57%, பழனி 86.23%, பாளையங்கோட்டை 68.97%, பல்லடம் 90.73%, பண்ருட்டி 86.09%, பாபநாசம் 80.31%, பாப்பிரெட்டிபட்டி 90.36%, பரமக்குடி 79.61%, பரமத்தி வேலூர் 90.24%, புதுக்கோட்டை 75.38%, பென்னாகரம் 90.70%, பெரம்பலூர் 85.93%, பேராவூரணி 81.92%, பெரியகுளம் 78.51%, பெருந்துறை 92.47%, பொள்ளாச்சி 88.09%, போளூர் 89.37%, பொன்னேரி 89.79%, பூம்புகார் 84.09%, புதுக்கோட்டை 83.26%, ராதாபுரம் 80.04%, ராஜபாளையம் 84.47%, ராமநாதபுரம் 75.39%, ராணிப்பேட்டை 88.51%, ராசிபுரம் 90.60%, ரிஷிவந்தியம் 88.04%, ராயபுரம் 79.34%, சேலம் வடக்கு 87.39%, சேலம் தெற்கு 91.01%, சேலம் மேற்கு 89.93%, சங்கரன் கோவில் 81.04%, சங்கராபுரம் 87.09%, சங்ககிரி 92.50%, சாத்தூர் 85.74%, சேந்தமங்கலம் 88.94%, சோழவந்தான் 87.23%, சோளிங்கர் 89.87%,


சிங்காநல்லூர் 81.19%, சீர்காழி 82.44%, சிவகங்கை 75.87%, சிவகாசி 84.26%, திருப் பெரும்புதூர் 86.12%, திருவரங்கம் 87.95%, திருவைகுண்டம் 81.04%, திருவில்லிபுத்தூர் 84.90%, சூலூர் 88.24%, தாம்பரம் 83.94%, தென்காசி 82.43%, தளி 84.59%, தஞ்சாவூர் 77.53%, திருமயம் 82.07%, திருப்பரங்குன்றம் 81.41%, திருப்போரூர் 87.98%, திருத்துறைப்பூண்டி 83.56%, திருவையாறு 85.19%, திருவாரூர் 83.03% திருவெறும்பூர் 81.21%, திருவிடைமருதூர் 80.64%, தொண்டாமுத்தூர் 87.54%, தூத்துக்குடி 80.92%, துறையூர் 86.52%, திண்டிவனம் 88.56%,

திருச்செந்தூர் 78.89%, திருச்செங்கோடு 90.06%, திருச்சி கிழக்கு 81.77%, திருச்சி மேற்கு 81.35%, திருச்சுழி 87.27%, திருக்கோவிலூர் 88.46%, திருநெல்வேலி 78.21%, திருப் பத்தூர் 88.69%, திருப்பத்தூர் (சிவகங்கை) 77.45%, திருப்பூர் வடக்கு 83.14%, திருப்பூர் தெற்கு 90.71%, திருத்தணி 90.23%, திண்டிவனம் 77.08%, திருவண்ணாமலை 87.27%, திட்டக்குடி 83.33%, உதகமண்டலம் 77.68%, உடுமலைப்பேட்டை 87.40%, உளுந்தூர்பேட்டை 89.54%, உசிலம்பட்டி 82.95%, ஊத்தங்கரை 86.15%, உத்திரமேரூர் 91.14%, வால்பாறை 85.91%, வந்தவாசி 88.62%, வாணியம்பாடி 87.23%, வானூர் 91.08%, வாசு தேவநல்லூர் 81.52%, வேதா ரண்யம் 85.18%, வேடசந்தூர் 91.61%, வீரபாண்டி 93.41%, வேலூர் 87.98%, வேப்பனஹள்ளி 89.79%, விக்கிரவாண்டி 90.50% விளாத்திகுளம் 84.16%, விளவங்கோடு 75.77%, வில்லிவாக்கம் 86.00%, விழுப்புரம் 86.60%, விராலிமலை 89.80%, விருதுநகர் 82.77%, விருத்தா சலம் 86.20%, ஏற்காடு 91.80% வாக்குகள் பதிவாகியுள்ளன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கோபாலகிருஷ்ணன்

**ஏப்ரல் 27 (2009)**



**திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில், கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.**

**பத்தாண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், இரு முறை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஈரானில் விமான சேவை மீண்டும் தொடக்கம்

டெக்ரான், ஏப். 27-
அமெரிக்கா இஸ்ரேலிய படைகள் கூட்டாக இணைந்து கடந்த பிப். 28 அன்று ஈரானின் மீது தாக்குதல்கள் மேற்கொண்டன. இதையடுத்து, இருதரப்புக்கும் இடையில் போர் தொடங்கியதால், ஈரானின் வான் வெளிப் பாதைகள் முழுவதுமாக முடக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா ஈரான் இடையே போர்நிறுத்தம் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், ஈரானுக்கும் பிற நாடுகளுக்கும் இடையேயான சர்வதேச போக்குவரத்துக்கான நடவடிக்கைகள் இன்று முதல் தொடங்கியுள்ளன.

சுமார் இரண்டு மாதங்களுக்குப் பிறகு முதல் முறையாக தெஹ்ரான் சர்வதேச விமான நிலையத்திலிருந்து வணிக விமான சேவைகளை ஈரான் மீண்டும் தொடங்கியது.

தெஹ்ரானில் உள்ள இமாம் கொமேனி சர்வதேச விமான நிலையத்தி லிருந்து இஸ்தான்புல், ஓமன் தலைநகர் மஸ்கட் மற்றும் சௌதி நகரமான மதீனா ஆகிய இடங்களுக்கு விமானங்கள் புறப்பட்டுச் சென்றதாக ஈரானின் அரசுத் தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

விமானங்களைக் கண்காணிக்கும் தளமான Flightradar24 இன் தரவுகளின்படி, இன்று காலையில் இஸ்தான்புல் நோக்கி மூன்று விமானங்கள் புறப்பட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவுடனான போர்நிறுத்தத்தின் மத்தியில், ஈரான் இந்த மாதத் தொடக்கத்தில் தனது வான்வெளியைப் பகுதியளவு மீண்டும் திறந்தது. இந்தப் போர்நிறுத்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான சண்டையை நிறுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் போர் தாக்கம்:

# அமெரிக்காவின் ஆயுத கையிருப்பு கணிசமாகக் குறைந்தது!

*வாஷிங்டன், ஏப். 27 -*
*ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த மார்ச் 28ம் தேதி தாக்குதலை தொடங்கின. இந்த போர் 38 நாட்கள் நடைபெற்றது. அதன் பின் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 2 வார கால சண்டை நிறுத்த ஒப்பந்தம் அறிவித்தார்.*

*இந்நிலையில் அமெரிக்க ராணுவம் கூறியதாவது: ஈரானில் மொத்தம் 13,000க்கும் மேற்பட்ட இலக்குகளைத் தாக்கினோம். ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டன. இது அமெரிக்க ராணுவம் ஒவ்வொரு ஆண்டும் வாங்கும் எண்ணிக்கையை விட 10 மடங்கும் அதிகம். ஒரு டொமஹாக் ஏவுகணையின் விலை 3.6 மில்லியன் டாலர்.*

*இவை தொலைதூர இலக்குகளைத் தாக்கும் திறன் படைத்தவை. ஈரான் போரில் 1,000க்கும் மேற்பட்ட டொமஹாக் ஏவுகணை பயன்படுத்தப்பட்டதால், அமெரிக்காவின் டொமஹாக் ஏவுகணையின் கையிருப்பு 3,000மாக குறைந்துள்ளது. இதே போல், எதிரி விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்க 1,200 பேட்ரியாட் ஏவுகணைகளை ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது.*

*இதன் விலை 4 மில்லியன் டாலருக்கு மேலாகும். கடந்தாண்டில் 600 பேட்ரியாட் ஏவுகணைகளை மட்டுமே அமெரிக்கா உற்பத்தி செய்தது. மேலும், வானில் இருந்து தரை இலக்குகளை தாக்கும் 1,100 (ஜாஸ்மர்) ஏவுகணைகளையும் அமெரிக்க ராணுவம் ஈரான் போரில் பயன்படுத்தியது.*

*இதன் காரணமாக இந்த வகை ஏவுகணைகள் அமெரிக்க ராணுவத்தில் தற்போது 1,500 மட்டுமே இருப்பில் உள்ளது. இது 600 மைல் தூரமுள்ள இலக்குகளைத் தாக்கும்.*

*இதன் விலை 1.1 மில்லியன் டாலர். 1,000க்கும் மேற்பட்ட ஏடிஏசிஎம்எஸ் என்ற தரை இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகளையும் ஈரான் போரில் அமெரிக்கா பயன்படுத்தியது. இவ்வாறு அமெரிக்க ராணுவம் கூறியுள்ளது. ஈரான் போர் காரணமாக ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ முகாம்களில் ஆயுத கையிருப்பு குறைந்துள்ளது.*

*ஈரானின் விலை குறைந்த ட்ரோன் தாக்குதலை சமாளிக்க, அமெரிக்கா அதிக விலையுள்ள பேட்ரியாட் ரக ஏவுகணைகளைப் பயன்படுத்தியது. காலியான ஆயுதங்களை மீண்டும் வாங்க கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என அமெரிக்க நாடாளுமன்றத்தில் பென்டகன் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கு வெகு நாட்களாகும் எனத் தெரிகிறது.*